Adda247

Sl. No. : 10001221

TNPSC Civil Judge Exam

CJ/18

பதிவு எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

# 2018

## (பட்டபடிப்புத் தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்கும்முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **அனைத்து** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை. ஒவ்வொரு தவறான விடைக்கும் **½ மதிப்பெண்** வீதம் கழிக்கப்படும்.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்து காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை அதற்குரிய ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத்தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
12. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
13. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

[Turn over

1. Which of the following conditions is not essential for valid gift of immovable property?

(A) Voluntariness
(B) Without consideration
(C) Handing over possession
(D) Acceptance

அசையா சொத்து குறித்த, முறையான கொடைக்கு பின்வருபவனவற்றுள் தேவையற்ற உட்கூறு (not essential condition) எது?

(A) தன்னிச்சையானது
(B) மறுபயன் இன்மை
(C) உடைமை ஒப்படைப்பு
(D) ஏற்பு

2. Suit for specific performance is maintainable

(A) to enforce the contract for sale
(B) to enforce the agreement for lease
(C) either (A) or (B)
(D) both (A) and (B)

ஏற்றதை ஆற்றுக வழக்கு,

(A) விற்பனைக்கான ஒப்பந்தத்தை வலியுறுத்த நிலைக்கத்தக்கது
(B) குத்தகைக்கான உடன்படிக்கையை வலியுறுத்த நிலைக்கத்தக்கது
(C) (A)-யை பொருத்துமட்டும் அல்லது (B)-யை பொருத்தமட்டும் நிலைக்கத்தக்கது
(D) (A) மற்றும் (B) இரண்டையும் பொருத்து நிலைக்கத்தக்கது

Adda247

3. Which of the following documents is required by law to be attested?

(A) Sale deed of immovable property of the value of Rs. 100 or upwards
(B) Exchange deed of immovable property of the value of Rs. 100 or upwards
(C) Registered sale agreement
(D) None of the above

பின்வரும் ஆவணங்களில் சான்று கையொப்பம் சட்டப்படி செய்யப்பட வேண்டிய ஆவணம் எது?

(A) ரூபாய் 100 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள அசையா சொத்திற்கான விற்பனை ஆவணம்
(B) ரூபாய் 100 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள அசையா சொத்து குறித்த பரிவர்த்தனை ஆவணம்
(C) பதிவு செய்யப்பட்ட விற்பனை உடன்படிக்கைகள்
(D) மேற்கண்டவைகள் எதுவுமில்லை


[Turn over

4. In a suit for Specific Performance to enforce agreement for sale, the title passes to the plaintiff

(A) when the decree and judgment are passed in his favour

(B) when the entire sale consideration is deposited after the decree

(C) when a direction is passed in an execution proceedings

(D) none of the above

விற்பனை உடன்படிக்கையை வலியுறுத்தி தாக்கல் செய்யப்படும் ஏற்றதை ஆற்றுக வழக்கில்.

(A) தீர்ப்பும், தீர்ப்பாணையும் வாதிக்கு ஆதரவாக பிறப்பிக்கப்படும் போது உரிமை மூலம் வாதிக்கு வந்தடைகிறது

(B) தீர்ப்பாணைக்குப் பிறகு விற்பனைக்கான மறுபயன் முழுவதும் வைப்பீடு செய்யும் போது உரிமை மூலம் வாதிக்கு வந்தடைகிறது

(C) நிறைவேற்று நடவடிக்கையில் பணிப்புரை பிறப்பிக்கப்படும் போது உரிமை மூலம் வந்தடைகிறது

(D) மேற்கண்ட எதுவுமில்லை

5. Termination of a lease of immovable property other than for agricultural or manufacturing purposes requires

(A) six months notice

(B) three months notice

(C) fifteen days notice

(D) thirty days notice

வேளாண் நோக்கம் அல்லது தயாரிப்பு நோக்கங்களுக்கான குத்தகையை தவிர்த்த மற்ற அசையா சொத்திற்கான குத்தகையை முடிவுக்கு கொண்டுவர

(A) ஆறு மாத கால அறிவிக்கை தேவை

(B) மூன்று மாத கால அறிவிக்கை தேவை

(C) பதினைந்து நாள் கால அறிவிக்கை தேவை

(D) முப்பது நாள் கால அறிவிக்கை தேவை

6. Which one of the following is not correct?

(A) A cheque is a form of Bill of Exchange

(B) A cheque is a form of Promissory Note

(C) A cheque includes the electronic image of a truncated cheque

(D) A demand draft is a form of Bill of Exchange

பின்வருவனவற்றில் எதுவொன்று சரியானது அல்ல?

(A) ஒரு காசோலை என்பது மாற்றுச்சீட்டின் படிவம்

(B) ஒரு காசோலை என்பது கடனுறுதிச் சீட்டின் படிவம்

(C) காசோலை என்பது உருக்குலைந்த காசோலையின் (truncated cheque) மின்னனு படிவத்தையும் (electronic image) உள்ளடக்கியது

(D) ஒரு கேட்பு வரைவோலை என்பது மாற்றுச்சீட்டின் படிவம் ஆகும்

Adda247

7. A "noting" of a Promissory Note or Bill of Exchange is made

(A) When a promissory note or Bill of exchange is dishonoured by non-acceptance or non-payment

(B) When a promissory note or bill of exchange is presented for collection

(C) When a promissory note or Bill of Exchange is executed

(D) None of the above

கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டில் மதிப்பு மறுப்பு குறிப்பு (Noting)

(A) கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு ஏற்கப்படாமையால் அல்லது செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்படும்போது மதிப்பு மறுப்பு குறிப்பு எழுதப்படுகிறது

(B) ஒரு கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டொன்று வசூலுக்கு தாக்கல் செய்யும்போது மறுப்பு குறிப்பு எழுதப்படுகிறது

(C) ஒரு கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு இயற்றப்படும்போது மறுப்பு குறிப்பு எழுதப்படுகிறது

(D) மேற்கண்டவை எதுவுமில்லை

8. Express contract means a contract made by

(A) Words either spoken or written

(B) Documents

(C) Both words and documents

(D) All of the above

'வெளிப்படையான ஒப்பந்தம்' என்பது

(A) பேசப்பட்ட வார்த்தைகள் அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள் மூலம் ஏற்படுத்தப்படுகிறது

(B) ஆவணங்கள் மூலம் ஏற்படுத்தப்படுகிறது

(C) வார்த்தைகளாலும், ஆவணங்கள் மூலமாகவும் ஏற்படுத்தப்படுகிறது

(D) மேற்கண்ட அனைத்தின் மூலமாகவும் ஏற்படுத்தப்படுகிறது

9. The term "bailment" means a delivery of a thing entrusted for

(A) Some special purpose or object upon a contract

(B) Delivery of goods free of cost

(C) Delivery of goods without cost for welfare of public

(D) None of the above

ஒப்படைவு என்பதன் பொருள்

(A) ஒப்பந்தத்தின் பேரில் ஒரு பொருளை சில சிறப்பு செயலுக்காக அல்லது நோக்கத்திற்காக வழங்கி ஒப்படைப்பதாகும்

(B) விலையின்றி பொருட்களை வழங்கி ஒப்புவிப்பது

(C) பொதுநலனிற்காக விலையின்றி பொருட்களை வழங்குவது

(D) மேற்கண்ட எதுவுமில்லை



Adda247

10. Contract is interpreted as an agreement enforceable by law vide Section ______ of the Indian Contract Act, 1872.

(A) Section 2(e)
(B) Section 2(f)
(C) Section 2(h)
(D) Section 2(i)

இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு ______ன் படி சட்டத்தால் செயலுறுத்தத்தக்க ஒரு உடன்பாடே ஒப்பந்தம் என பொருள் விளக்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 2(e)
(B) பிரிவு 2(f)
(C) பிரிவு 2(h)
(D) பிரிவு 2(i)

11. Consideration in a contract

(A) May be past, present or future
(B) May be present or future only
(C) Must be present only
(D) Must be future only

ஒரு ஒப்பந்தத்தில் 'மறுபயன்' என்பது

(A) கடந்த காலத்தியதாகவோ, நிகழ்காலத்தியதாகவோ அல்லது எதிர்காலத்தியதாகவோ இருக்கலாம்
(B) நிகழ்காலத்தியதாக அல்லது எதிர்காலத்தியதாக மட்டுமே இருக்கலாம்
(C) நிகழ்காலத்தியதாக மட்டுமே இருக்க முடியும்
(D) எதிர்காலத்தியதாக மட்டுமே இருக்க முடியும்

12. Section 31 of the Specific Relief Act deals with

(A) Rectification of the instrument
(B) Recession of contract
(C) Cancellation of instrument
(D) Performance of contract

குறித்தவகை மாற்றீடு சட்டம் பிரிவு 31 இது குறித்து சொல்கிறது

(A) ஆவணத் திருத்தமைப்பு
(B) ஒப்பந்த இடைநிறுத்தம்
(C) ஆவணத்தை ரத்து செய்தல்
(D) ஒப்பந்த நிறைவேற்றம்

13. Protective Discrimination is constitutionally valid in view of

(A) Articles 15(4) and 16(4)
(B) Articles 15(4) and 20(2)
(C) Articles 15(4) and 21
(D) None of the above

அரசமைப்பின் எப்பிரிவுகளின் படி பாதுகாக்கும் வேற்றுமைகள் (Protective Discrimination) செல்லத்தக்கவையாகும்?

(A) பிரிவு 15(4) மற்றும் 16(4)
(B) பிரிவு 15(4) மற்றும் 20(2)
(C) பிரிவு 15(4) மற்றும் 21
(D) மேற்கண்டவைகள் எதுவுமில்லை

14. In the Indian Constitution

(A) Fundamental rights and fundamental duties are enumerated
(B) Fundamental rights alone are enumerated
(C) Fundamental duties are not enumerated
(D) Fundamental duties alone are enumerated

இந்திய அரசமைப்பில்

(A) அடிப்படை உரிமைகளும், அடிப்படைக் கடமைகளும் விவரக் குறிப்பிடப்பட்டுள்ளன
(B) அடிப்படை உரிமைகள் மட்டுமே விவரக் குறிப்பிடப்பட்டுள்ளன
(C) அடிப்படை கடமைகள் விவரக் குறிப்பாக குறிப்பிடவில்லை
(D) அடிப்படை கடமைகள் மட்டுமே விவரக் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது

15. Choose the wrong answer

(A) Part IV-A of the Indian Constitution mentions 11 duties to every citizen of India
(B) Part III of the Indian Constitution mentions 5 kinds of writs
(C) Part IV of the Indian Constitution lays down the fundamentals in the governance of the country
(D) Freedom of speech and expression is one of the rights protected under Article IX of the Constitution

தவறான விடையை தேர்வு செய்க

(A) இந்திய அரசமைப்பின் பகுதி IV A-யில் இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமைகள் என 11 கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன
(B) இந்திய அரசமைப்பு பகுதி III-ல் 5 வகையான நீதிப்பேராணைகள் குறிப்பிடப்பட்டுள்ளன
(C) இந்திய அரசமைப்பு பகுதி IV-ல் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நாட்டின் ஆட்சி நெறிக்கு அடிப்படையாக அமையும்
(D) பேச்சுரிமை, சிந்தனை வெளிப்படுத்தும் உரிமை என்பது இந்திய அரசமைப்பு பிரிவு IX-ன் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு உரிமையாகும்



Adda247

16. What are the 4 objectives mentioned in the preamble of the Indian Constitution?

(A) Justice, liberty, equality and fraternity

(B) Social, secular, democratic and republic

(C) Liberty, equality, fraternity and secular

(D) Justice, liberty, federal and democratic

இந்திய அரசமைப்பின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள 4 குறிக்கோள்கள் என்னென்ன?

(A) நீதி, தன்னுரிமை, சமன்மை மற்றும் உடன் பிறப்புரிமை

(B) சம நலச் சமுதாயம், சமயச் சார்பின்மை, மக்களாட்சி முறையுடன் அமைந்த ஒரு குடியரசு

(C) தன்னுரிமை, சமன்மை, உடன் பிறப்புரிமை வளர்த்தல் மற்றும் மதச்சார்பின்மை

(D) நீதி, தன்னுரிமை, கூட்டாட்சி மற்றும் மக்களாட்சி

17. The Supreme Court of India

(A) Declares law

(B) Enacts law

(C) Drafts law

(D) None of the above

இந்திய உச்ச நீதிமன்றம்

(A) சட்டத்தை விளம்புகிறது

(B) சட்டத்தை இயற்றுகிறது

(C) சட்ட வரைவு செய்கிறது

(D) மேற்கூறியதில் எதுவுமில்லை

18. Judicial review means

(A) To review the judgment of one High Court Judge by another High Court Judge

(B) To review one's own judgment

(C) Testing the judgment of High Court by Supreme Court

(D) Testing the action of Executive by Judiciary

'நீதிமுறை மேலாய்வு' என்பதன் பொருள்

(A) ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியொருவரின் தீர்ப்புகளை மற்றொரு உயர்நீதிமன்ற நீதிபதியால் மறு ஆய்வு செய்தல்

(B) தமது தீர்ப்புரைகளை தாமே மறு ஆய்வு செய்தல்

(C) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகள் , உச்சநீதிமன்றத்தால் ஆய்வு செய்தல்

(D) நிர்வாகத் துறையின் செயல்பாடுகளை நீதித்துறை ஆய்வு செய்தல்

Adda247

19. In Cuddalore District at Virudhachalam Taluk, there are one Additional District Court, one Principal Sub-Court, one Additional Sub-Court and three District Munsif Courts. Three suits are pending before three different District Munsif Courts in the same Taluk between the same parties. One of the parties wants to file a transfer OP for joint trial. The transfer OP lies before

(A) The Principal Sub-Court at Vridhachalam

(B) The Additional District Court at Vridhachalam

(C) The Principal District Court at Cuddalore

(D) High Court

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் வட்டத்தில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றமும், ஒரு முதன்மை சார்பு நீதிமன்றமும், ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றமும், மற்றும் மூன்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களும் உள்ளன. ஒரே தரப்பினர்களுக்கிடையேயான மூன்று வழக்குகள் அதே வட்டத்தில் உள்ள, மூன்று வெவ்வேறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. ஒரு தரப்பினர் இணைந்த விசாரணைக்காக வேண்டி மாறுதல் முதலேற்பு மனுவை தாக்கல் செய்ய விரும்புகிறார். மேற்படி மாறுதல் முதலேற்பு மனு

(A) முதன்மை சார்பு நீதிமன்றம், விருத்தாச்சலத்தில் நிலைக்கத்தக்கது

(B) கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருத்தாச்சலத்தில் நிலைக்கத்தக்கது

(C) முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூரில் நிலைக்கத்தக்கது

(D) உயர்நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கது

20. Where a decree is silent with respect to the payment of further interest on the principal sum from the date of the decree to the date of payment or other earlier date

(A) A separate suit shall lie for interest

(B) A separate suit shall not lie for interest

(C) A revision shall lie

(D) None of the above

ஒரு தீர்ப்பாணையில், அசல் தொகைக்கு தீர்ப்பாணைத் தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரையிலோ அல்லது வேறு முந்தைய தேதி வரையிலோ கூடுதல் வட்டி (Further interest) செலுத்துவதைப் பொறுத்து எதுவும் சொல்லப்படவில்லையெனில்

(A) வட்டி கோரி தனியாக உரிமை வழக்கு தொடரலாம்

(B) வட்டி கோரி தனியாக உரிமை வழக்கு தொடர முடியாது

(C) ஒரு சீராய்வு தொடரலாம்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

21. In which of the following decrees, no appeal shall lie?

(A) Passed under Rule 5 of Order XXXVI

(B) Passed under Rule 3 of Order XXIII

(C) (A) and (B)

(D) None of the above

கீழ்கண்ட தீர்ப்பாணைகளில் எத்தீர்ப்பாணையின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்ய இயலாது?

(A) வகுமுறை XXXVI விதி-5-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டதன் பேரில்

(B) வகுமுறை XXIII விதி-3-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டதன் பேரில்

(C) (A) மற்றும் (B)

(D) மேற்கண்ட எதன் பேரிலும் இல்லை

22. A tenant filed a suit for return of advance money against the landlord for a sum of Rs. 75,000, in which, the landlord filed counter claim for damages for a sum of Rs. 8,00,000. In that case, what shall the Trial Court do with the counter claim?

(A) Dismiss the counter claim

(B) Reject the counter claim

(C) Return the counter claim on the ground that it is more than the suit claim

(D) Return the counter claim on the ground that it exceeds the pecuniary jurisdiction of the Court

வாடகைதாரர் நில மேலாளருக்கு எதிராக முன்பணம் ரூ. 75,000-த்தை திரும்பக் கேட்டு உரிமையியல் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததில், நில மேலாளர் எதிர்பாத்திய கோரிக்கை தாக்கல் செய்து அதில் ரூ. 8,00,000 இழப்பீடு கோருகிறார். அந்த வழக்கில் எதிர்பாத்திய கோரிக்கை குறித்து விசாரணை நீதிமன்றம் என்ன செய்யலாம்?

(A) எதிர்பாத்தியத்தை தள்ளுபடி செய்யலாம்

(B) எதிர்பாத்தியத்தை மறுத்து ஒதுக்கலாம்

(C) வழக்கு கோரிக்கைக்கு மேலாக எதிர்பாத்தியம் உள்ளதாக அதை திருப்பி (Return) உத்திரவிடலாம்

(D) நீதிமன்ற பணவரை ஆள்வரை எல்லைக்கு மிகைப்பட்டு எதிர்பாத்தியம் உள்ளதாக அதை திருப்பி உத்திரவிடலாம்

Adda247

23. Which among the following, the Court cannot consider for framing issues?

(A) Pleadings of the Parties

(B) Allegations made on oath

(C) Answers given to interrogatories

(D) Statement of third party witness in a previous case

பின்வருவனவற்றுள் எதை நீதிமன்றம் எழுவினாக்கள் வனையும் போது கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை?

(A) தரப்பினர்களின் வாதுரைகள்

(B) ஆணையுறுதியின் பேரில் சொல்லப்பட்டுள்ள சாட்டுரைகள்

(C) விடுவினாவிற்கான பதில்கள்

(D) முன்னொரு வழக்கில் மூன்றாம் நபர் சாட்சியின் கூற்று

24. A suit is withdrawn with leave to file a fresh suit on the same cause of action. Is there a time limit within which the second suit should be filed?

(A) No time limit

(B) Within such period as if a fresh suit is filed on a fresh cause of action

(C) Before the expiry of the limitation prescribed for filing the suit based on the cause of action of the suit withdrawn

(D) Court that grants leave should fix the time for filing fresh suit and it must be filed within that period

அதே வழக்கு மூலத்தின் பேரில் புதிதாக உரிமை வழக்கு தொடருவதற்கான நீதிமன்ற அனுமதியுடன் ஒரு வழக்கு திரும்பப் பெறப்படுகிறது. இரண்டாவது வழக்கு இன்ன காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும் என ஒரு காலவரையறை உள்ளதா?

(A) காலவரையறை ஏதுமில்லை

(B) புதியதொரு வழக்கு மூலத்துடன், புதியதொரு வழக்கை தாக்கல் செய்தால் என்ன கால அளவோ அந்த காலத்திற்குள்

(C) திரும்ப பெறப்பட்ட வழக்கிற்கு அடிப்படையான வழக்கு மூலத்தின் பேரில் வழக்கு தாக்கல் செய்ய காலவரைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலவரையறை முடிவதற்கு முன்பாக

(D) அனுமதி வழங்கி உத்திரவிடும் நீதிமன்றம் புதிய வழக்கு தாக்கல் செய்ய ஒரு காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் மற்றும் அக்காலத்திற்குள் அவ்வழக்கு தொடரப்பட்டிருக்க வேண்டும்

Adda247

25. "A" assaults "B". "B" goes to the police station and lodges a complaint. The act of "B" is relevant

(A) As a complaint under Section 2(d) Cr.P.C.

(B) Under Section 8 of the Indian Evidence Act

(C) Under Section 9 of the Indian Evidence Act

(D) Under Section 17 of the Indian Evidence Act as admission

"A", "B" யை தாக்குகிறார் (assaults). "B" காவல் நிலையம் சென்று புகார் மனு ஒன்றைக் கொடுக்கின்றார். "B" ன் இத்தகைய செயல் தொடர்புடையதாகும்

(A) கு.வி.மு. சட்டம் பிரிவு 2(d) ன் கீழ் ஒரு முறையீடு

(B) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 8–ன் கீழ்

(C) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 9–ன் கீழ்

(D) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 17–ன் கீழ் ஒரு ஏற்புரை போன்று

26. A confession to a Church priest is

(A) Irrelevant

(B) Inadmissible in evidence

(C) An admission under Section 21 of the Indian Evidence Act

(D) Privileged communication

ஒரு திருச்சபைச் சமய குருவிடம் அளிக்கும் குற்ற ஏற்புரை

(A) தொடர்பற்றது

(B) சான்றாக கொள்ளத்தக்கதல்ல

(C) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 21–ன் கீழான ஏற்புரை

(D) காப்புடைச் செய்திகள்

27. (i) All confessions are admissions.

(ii) All admissions are confessions.

(A) Both are correct

(B) Both are wrong

(C) (i) alone is correct

(D) (ii) alone is correct

(i) எல்லாக் குற்ற ஏற்புரைகளும் ஏற்புரைகளே.

(ii) எல்லா ஏற்புரைகளும் குற்ற ஏற்புரைகளே.

(A) இரண்டும் சரி

(B) இரண்டும் தவறு

(C) (i) மட்டும் சரி

(D) (ii) மட்டும் சரி

28. A dying declaration under Section 32(1) of the Indian Evidence Act is admissible

(A) Only in a civil case
(B) Only in a criminal case
(C) In civil and criminal cases
(D) None of the above

இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 32(1)-ன் கீழ் ஒரு மரண வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது ஆகும்

(A) உரிமை வழக்கொன்றில் மட்டும்
(B) குற்ற வழக்கொன்றில் மட்டும்
(C) உரிமை வழக்குகளிலும், குற்ற வழக்குகளிலும்
(D) மேற்கண்ட எதுவும் இல்லை

29. "A" is brutally attacked by "B". "A" tells his wife that he was attacked by "B" and soon thereafter, "A" dies. In the trial of "B", the statement of "A" to his wife is

(A) Inadmissible in evidence as it is a privileged communication made by husband to wife
(B) Admissible in evidence and relevant under Section 32(1) of the Indian Evidence Act
(C) Irrelevant in evidence as it has not been made to a Magistrate
(D) None of the above

"A", "B"-யால் மனித பண்பற்ற வகையில் தாக்கப்பட்டிருக்கிறார். "A" தனது மனைவியிடம், தாம் "B"-யால் தாக்கப்பட்டது குறித்து சொல்கிறார். சற்றுபின்னர் "A" இறந்து விடுகிறார். "B"-ன் வழக்கு விசாரணையில், "A" தனது மனைவியிடம் சொன்ன உரைகள்

(A) கணவனுக்கும் மனைவிக்குமிடையேயான இத்தகைய உரையாடல்கள் காப்புடைச் செய்திகள் என்பதால் சாட்சியமாக அனுமதிக்கத்தக்க தல்ல
(B) சாட்சியமாக கொள்ளத்தக்கதும், இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 32(1)-ன் கீழ் தொடர்புடையதுமாகும்
(C) குற்றவியல் நடுவரிடம் சொல்லப்பட்டிருக்காததால் தொடர்பற்ற சாட்சியம் ஆகும்
(D) மேற்கண்ட எதுவுமில்லை

30. The evidence of a post-mortem doctor in a murder case relating to the cause of death of the deceased is

(A) Binding on the Court
(B) Not binding on the Court
(C) Relevant under Section 45-A of the Indian Evidence Act
(D) Relevant under Section 47 of the Indian Evidence Act

கொலை வழக்கொன்றில் இறந்தவரின் இறப்பிற்கான காரணம் தொடர்பான சடலக்கூராய்வு மருத்துவரின் சாட்சியம்

(A) நீதிமன்றத்தை கட்டுப்படுத்தும்
(B) நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது
(C) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 45-A யின் கீழ் தொடர்புடையதாகும்
(D) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 47-ன் கீழ் தொடர்புடையதாகும்



Adda247

31. A person arrested for an offence under Section 324 IPC can be remanded to police custody, during the first 15 days of remand

(A) Any number of times
(B) Only once
(C) Only for 3 days
(D) None of the above

இ.த.ச. பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்காக வேண்டி கைது செய்யப்பட்டிருக்கிற நபரை, முதல் 15 நாட்களுக்குள்ளான காவல் வைப்பின்போது, காவல் பிடியில் வைத்து உத்தரவிடலாம்

(A) எத்தனை முறை வேண்டுமானாலும்
(B) ஒரே ஒரு முறை மட்டுமே
(C) 3 நாட்களுக்கு மட்டும்
(D) மேற்கண்ட எதுவுமில்லை

32. Inquiry as defined in the Cr.P.C., 1973 is conducted by

(A) Police officer
(B) Police officer and magistrate
(C) Magistrate or court
(D) Court or police officer

கு.வி.மு. சட்டம் 1973-ல் வரையரை செய்துள்ளபடி விசாரணை (Inquiry)

(A) காவல் அதிகாரிகளால் நடத்தப்படுகிறது
(B) காவல் அதிகாரிகளாலும் குற்றவியல் நடுவராலும் நடத்தப்படுகிறது
(C) குற்றவியல் நடுவர் அல்லது நீதிமன்றத்தால் நடத்தப்படுகிறது
(D) நீதிமன்றம் அல்லது காவல் அதிகாரிகளால் நடத்தப்படுகிறது

33. Warrant case includes

(A) A case which is not a sessions case
(B) A case in which the Police Officer can arrest only with a warrant
(C) A case relating to an offence punishable with imprisonment exceeding two years
(D) A case relating to an offence in which court can issue only a warrant for the appearance of the accused

'பிடிகட்டளை வழக்கு' என்பது உள்ளடங்கியது :

(A) அமர்வு வழக்கு அல்லாத ஒரு வழக்கு
(B) பிடியாணையின் பேரில் மட்டுமே காவல் அதிகாரி கைது செய்ய இயலும் என்றவாறான வழக்கு
(C) இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட சிறைதண்டனைக்குரிய குற்றம் தொடர்பானதொரு வழக்கு
(D) எதிரி முன்னிலையாக வேண்டி நீதிமன்றம் பிடியாணை மட்டுமே பிறப்பிக்க முடியும் என்றவாறான குற்றம் தொடர்பான வழக்கு

Adda247

34. A person on bail, jumps bail and absconds, can be prosecuted afresh

(A) only for the offence in which he was on bail

(B) under Section 229-A IPC

(C) under Section 446-A Cr.P.C.

(D) under Section 176 IPC

பிணையில் இருக்கும் நபர் பிணை நிபந்தனைகளை பின்பற்றாமல் தலைமறைவாகி விடுகிறார். அதற்கு புதிதாக குற்ற வழக்கிட முடியும்

(A) எந்த குற்றத்திற்காக பிணையில் இருந்து வந்தாரோ அந்த குற்றத்திற்கு மட்டும்

(B) இ.த.ச.பிரிவு 229-A-ன் கீழ்

(C) கு.வி.மு.ச. பிரிவு 446-A-ன் கீழ்

(D) இ.த.ச. பிரிவு 176-ன் கீழ்

35. Summons to produce a document or other thing under Section 91 Cr.P.C. can be issued to compel

(A) any person, excluding the accused, to produce

(B) any person, including the accused to produce

(C) only the accused to produce

(D) only a witness to produce

கு.வி.மு.ச. பிரிவு 91 – ஆவணங்களை அல்லது பொருட்களை முன்னிலைப்படுத்த, அழைப்பாணை மூலம் எவரைக் கட்டாயப்படுத்தி உத்திரவிடலாம்?

(A) எதிரியை தவிர்த்த எந்தவொரு நபரையும்

(B) எதிரியை உள்ளடக்கிய எந்தவொரு நபரையும்

(C) எதிரியை மட்டுமே

(D) சாட்சியை மட்டுமே

Adda247

36. In the State of Tamil Nadu, under Section 125 Cr.P.C., the Magistrate can award monthly maintenance of

(A) Rs. 500 only

(B) Rs. 10,000 only

(C) Any amount

(D) Rs. 25,000 only

தமிழ்நாடு மாநிலத்தில் கு.வி.மு. சட்டம் பிரிவு 125-ன் கீழ் குற்றவியல் நீதித்துறை நடுவர் மாத வாழ்க்கைப் பொருளுதவித் தொகையாக எவ்வளவு உத்தரவிட முடியும்?

(A) ரூபாய் 500 மட்டுமே

(B) ரூபாய் 10,000 மட்டுமே

(C) எந்தத் தொகையின் அளவிற்கும்

(D) ரூபாய் 25,000 மட்டுமே

37. "A" beats his wife "B" severely. In self defence, "B" attacks "A" with a knife and causes A's death. This is witnessed by their major son "C" who intentionally omits to give any information of the offences to the police

(A) "C" is liable for omission to give information of the offence

(B) "C" is not liable for omission to give information because "B" caused the death of "A" in self defence

(C) "B" is liable for omission to give information of the death of "A"

(D) "B" and "C" are jointly liable for omission to give information of the offence

"A" தனது மனைவி "B"-யை கடுமையாக அடிக்கிறார். தற்காப்பிற்காக, "B" கத்தியால் "A"-யை தாக்கி அதன் விளைவாக "A" இறந்துவிடுகிறார். இந்நிகழ்விற்கு சாட்சியான உரிமை வயதையடைந்த அவர்களது மகன் "C" உட்கருத்துடன் குற்றம் குறித்த ஏதொரு தகவலையும் தெரிவிக்கத் தவறுகிறார்

(A) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "C" பொறுப்பாவார்

(B) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக 'C' பொறுப்பாக மாட்டார். ஏனென்றால் "A"-விற்கு விளைவித்த மரணமானது, "B"-யின் தற்காப்புரிமையை செயல்படுத்தியதால் ஏற்பட்டதாகும்

(C) "A"-ன் இறப்பு குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "B" பொறுப்பாவார்

(D) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "B"-யும் "C"-யும் கூட்டாக பொறுப்பாவார்கள்

38. Kidnapping as defined in IPC is

(A) forcibly compelling a mentally sound person who is more than 18 years old to go from any place

(B) taking away a mentally unsound person who is more than 18 years old without the consent of his lawful guardian

(C) forcibly marrying a minor girl without the consent of her lawful guardian

(D) keeping a person in wrongful confinement

இ.த. சட்டப் பிரிவில் 'கடத்திச் செல்லல்' என்றதன் வரையறையாக

(A) வன்முறையுடன், கட்டாயப்படுத்தி ஒரு நல்ல மனநிலையிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட நபரை எந்த இடத்திற்கு வேண்டுமெனினும் அழைத்துச் செல்வது

(B) பித்துபிடித்த 18 வயது பூர்த்தியடைந்த எந்தவொரு நபரையாவது அவரது காப்பாளரின் இசைவில்லாமல் அழைத்துச் செல்லுதல்

(C) சட்டபூர்வ காப்பாளரின் இசைவு இல்லாமல் வன்முறையின் மூலம் இளவரை திருமணம் செய்தல்

(D) ஒரு நபரை முறையின்றி சிறைப்படுத்தி வைத்திருப்பது

39. "A" is married to "B". During the subsistence of marriage, "A" marries "C" with the consent of "B".

(A) "A" is liable for bigamy
(B) "A" is not liable for bigamy
(C) "A" is liable for cheating
(D) "A" is liable for adultery

'A' B-யைத் திருமணம் செய்திருக்கிறார். திருமணம் நடப்பில் இருக்கும்போது A, B-யின் இசைவோடு, C-ஐ திருமணம் செய்கிறார்.

(A) 'A' இருதுணைமணக் குற்றத்திற்கு பொறுப்பாவார்
(B) 'A' இருதுணைமணக் குற்றத்திற்கு பொறுப்பாகமாட்டார்
(C) 'A' ஏமாற்றுதல் குற்றத்திற்கு பொறுப்பாவார்
(D) 'A' பிறன்மனை புகுதல் குற்றத்திற்கு பொறுப்பாவார்

40. "A", a thief puts his hand into the pocket of "B", a stranger to steal his purse, but, finds no purse in the pocket.

(A) "A" is liable for theft
(B) "A" is liable for robbery
(C) "A" is liable for preparation to commit theft
(D) "A" is liable for attempt to commit theft

'A' என்ற ஒரு திருடன், B என்ற ஒரு அயலரின் பணப்பையை திருடவேண்டி, B-யின் பாக்கெட்டிற்குள் 'A' தனது கையை விடுகிறார். ஆனால் பாக்கெட்டில் பணப்பை (purse) ஏதும் இல்லை.

(A) 'A' திருட்டிற்கு பொறுப்பாவார்
(B) 'A' கொள்ளை குற்றத்திற்கு பொறுப்பாவார்
(C) திருட்டு குற்றம்புரிவதற்கான முன்னேற்பாட்டு குற்றத்திற்கு பொறுப்பாவார்
(D) திருட்டு முயற்சி குற்றத்திற்கு 'A' பொறுப்பாவார்

41. "X", a 17 year old boy is sexually assaulted by "Y", a 25 year old lady. "Y" can be prosecuted under

(A) The Protection of Children from Sexual Offences Act, 2012
(B) Section 376 IPC
(C) Under the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000
(D) For assault under the IPC

X என்ற 17 வயதுடைய பையன், 25 வயதுடைய Y என்ற பெண்ணால் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். Y எந்த குற்றத்திற்காக குற்ற வழக்கிடப்படலாம்?

(A) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம் 2012
(B) இ.த.ச. பிரிவு 376
(C) இளஞ்சிரார் நீதிச் (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2000
(D) இந்திய தண்டனை சட்டத்தின் கீழான தாக்குதல் குற்றத்திற்கு



Adda247

42. In Tamil, the five great epics are

(A) Silapathikaram, Manimegalai, Kundalakesi, Valayapathi and Seevaga Chinthamani

(B) Silapathikaram, Kamba Ramayanam, Manimegalai, Thirukkural and Valayapathi

(C) Silapathikaram, Thirukkural, Manimegalai, Kundalakesi and Valayapathi

(D) Silapathikaram, Manimegalai, Kundalakesi, Kamba Ramayanam and Thirukkural

தமிழில் ஐம்பெருங்காப்பியங்களாவன

(A) சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி மற்றும் சீவகசிந்தாமணி

(B) சிலப்பதிகாரம், கம்பராமாயணம், மணிமேகலை, திருக்குறள் மற்றும் வளையாபதி

(C) சிலப்பதிகாரம், திருக்குறள், மணிமேகலை, குண்டலகேசி மற்றும் வளையாபதி

(D) சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, கம்பராமாயணம் மற்றும் திருக்குறள்

43. Which Indian was appointed as the permanent Judge of the International Court of Justice twice?

(A) Justice Nagendra Singh

(B) Justice R.N. Mishra

(C) Justice B.N. Rau

(D) Justice B.N. Agarwal

சர்வதேச நீதிமன்றத்தில் இருமுறை நிரந்தர நீதிபதியாக அமர்த்தப்பட்டிருந்த இந்தியர் யார்?

(A) நீதிபதி நாகேந்திரசிங்

(B) நீதிபதி R.N. மிஸ்ரா

(C) நீதிபதி B.N. ராவ்

(D) நீதிபதி B.N. அகர்வால்

Adda247

44. In the 2016 Olympic Games, how many medals did India win?

(A) 2

(B) 3

(C) 5

(D) 6

2016 ல் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்தியா எத்தனை பதக்கங்களை வென்றது?

(A) 2

(B) 3

(C) 5

(D) 6

45. The capital of Pallavas was

(A) Kaveripattinam

(B) Kaveripakkam

(C) Kanchipuram

(D) Villupuram

பல்லவர்களின் தலைநகரமாக இருந்தது

(A) காவேரிப்பட்டினம்

(B) காவேரிப்பாக்கம்

(C) காஞ்சிபுரம்

(D) விழுப்புரம்

46. SAF Games for the year 2019 is to be held at

(A) Kathmandu, Nepal

(B) Dhaka, Bangladesh

(C) Islamabad, Pakistan

(D) Colombo, Sri Lanka

2019-ஆம் வருடத்தில் SAF விளையாட்டுகள் எங்கு நடைபெற உள்ளது?

(A) காத்மண்டு, நேபால்

(B) தாக்கா, பங்களாதேஷ்

(C) இஸ்லாமாபாத், பாகிஸ்தான்

(D) கொழும்பு, ஸ்ரீலங்கா

Adda247

47. Which of the following cases is popularly known as "the Mandal case"?

(A) TMA Pai Foundation vs. Union of India

(B) Ashok Kumar Thakur vs. Union of India

(C) Indra Sawhney vs. Union of India

(D) None of the above

பின்வருவனவற்றுள் 'மண்டல் வழக்கு' என பிரபலமாக அழைக்கப்படுகின்ற வழக்கு எது?

(A) டி.எம்.ஏ. பாய் பவுண்டேசன் | எதிர் | இந்திய ஒன்றியம்

(B) அசோக் குமார் தாக்கூர் | எதிர் | இந்திய ஒன்றியம்

(C) இந்திரா சானே | எதிர் | இந்திய ஒன்றியம்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

48. Under the Tamil Nadu Buildings (Lease & Rent Control) Act, 1960, the expression "landlord" includes the person

(A) who is receiving rent

(B) who is entitled to receive rent

(C) both (A) and (B)

(D) none of the above

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் 1960-ன் கீழான 'கட்டிட உரிமையாளர்' (landlord) என்ற சொல்

(A) வாடகையை பெற்றுக் கொண்டிருக்கும் நபரை உள்ளடக்கும்

(B) வாடகையை பெறுவதற்கு உரிமையுடைய நபரை உள்ளடக்கும்

(C) (A) மற்றும் (B) இரண்டையும் உள்ளடக்கும்

(D) மேற்சொல்லப்பட்டுள்ளதில் எதுவுமில்லை

49. "Landlord" includes

(A) person who is entitled to receive rent on his own account

(B) person who is entitled to receive rent on behalf of others

(C) tenant who has sublet with the consent of owner

(D) all the above

"நில மேலாளர்" (landlord) என்பவர்

(A) தமக்காக வாடகையை பெறுவதற்கு உரிமையுடைய நபர்

(B) மற்றொருவர் சார்பாக வாடகையை பெறுவதற்கு உரிமையுடைய நபர்

(C) சொத்துரிமையாளரின் இசைவோடு உள்வாடகைக்கு விட்டிருக்கிற வாடகைதாரர்

(D) மேற்கண்ட அனைத்தும்

50. The doctrine of clog on the equity of redemption is a rule of

(A) justice

(B) equity

(C) good conscious

(D) all the above

அடமான மீட்புத் தடை கோட்பாடு என்பது

(A) நீதியின்பாற்பட்ட விதி

(B) தகைமை நெறியின்பாற்பட்ட விதி

(C) நன்மனச்சான்றின் பேரிலான விதி

(D) மேற்கண்டவைகள் அனைத்தும்

Adda247

51. *Lis pendens* continues

(A) till the preliminary decree is passed

(B) till the final decree is passed

(C) till the execution proceedings is initiated

(D) until complete satisfaction and discharge of such decree

'நிகழ்வழக்கு' என்பது

(A) முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்வரை தொடர்கிறது

(B) இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்வரை தொடர்கிறது

(C) நிறைவேற்று நடவடிக்கைகள் துவங்கும் வரை தொடர்கிறது

(D) இத்தகைய தீர்ப்பாணை முழுமையாக தீர்க்கப்படும்வரையும், நிறைவேற்றப்படும்வரை தொடர்கிறது

52. The provision of simple mortgage applies to

(A) English mortgage

(B) Mortgage by deposit of Title Deeds

(C) Either (A) or (B)

(D) None of the above

ஈட்டடைமானத்திற்கான வகையங்கள்

(A) இங்கிலீஷ் அடைமானத்திற்கு பொருந்துபவை ஆகும்

(B) பத்திர வைப்பு அடைமானத்திற்கு பொருந்துபவை ஆகும்

(C) (A)-விற்கு மட்டும் அல்லது (B)-க்கு மட்டும், பொருந்துபவை ஆகும்

(D) மேற்கண்டதில் எதற்கும் பொருந்தாது

53. Lease of the immovable property is a transfer of

